**தலைப்பு 153 – காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 153 – காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 06 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்

கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்படாமை. | 2.1.1(அ) |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.1.1(ஆ) |
| | | 3. | எதிர்பார்த்த இலக்குகள் வீழ்ச்சியடைதல் | 2.1.1(இ) |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. | முகாமைத்துவ பலவீனம் | 2.5 |
| | | 2. | இணக்கமின்மைகள் | 2.9 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான | 1. | செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்ளாத செயற்திட்டங்கள் | 2.1.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 2. | பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2.1 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | பொருட்கள் மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட பற்றாக்குறைகளும் மிகைகளும் | 2.3(அ) |
| | | 2. | வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் | 2.3(ஆ) |
| | | 3. | ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல். | 2.3(இ) |
| | | 4. | ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை | 2.8 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | | வருடாந்த பாதீட்டு எல்லையை விஞ்சி கடப்பாடுகளுக்கு உட்படல் | 2.4 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | | வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.6 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு வெளியே காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை கூடுதல் கவனத்துடன் செயற்பாட்டு அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் | | நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்படாமை | 2.7 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் காட்டப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் பிரதான செயற்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது விபரமான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பெறுகைத் திட்டம் வருடாந்த மதிப்பீட்டிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 05 ஆண்டுகளுக்கான பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | நிதி ஏற்பாடு | செலவு | இலக்கிடப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் அளவு | நில அளவை செய்யப்பட்ட காணித் துண்டுகளின் அளவு | சிபார்சு செய்யப்பட்டு அங்கீகரிக்கப் பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை | தீர்மானம் பகிரங்கப்படுத்தப்பட்ட/ வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை | தனிப்பட்டவர் களால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | | | | |
| 2013 | 800 | 668 | 135,000 | 110,630 | 71,315 | 58,690 | 28,402 |
| 2014 | 400 | 445 | 122,090 | 122,239 | 53,448 | 66,759 | 24,242 |
| 2015 | 546 | 413 | 206,580 | 83,957 | 51,475 | 53,484 | 29,043 |
| 2016 | 500 | 362.6 | 45,000 | 133,727 | 60,830 | 59,880 | 21,872 |
| 2017 | 400 | 256.6 | 48,000 | 105,395 | 59,672 | 56,377 | 20,151 |

2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அடைந்து கொள்ளப்பட வேண்டிய இலக்குகள் மூன்று மடங்கால் வீழ்ச்சியடைந்துள்ளன என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறு தீர்மானம் பகிரங்கப்படுத்தப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை எந்த ஆண்டிற்கு உரியது என்பது தொடர்பான அறிக்கையை பேணுதல் இடம்பெற்றிருக்கவில்லை.

### 2.1.2 செயல்முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ளாத செயற்திட்டம்

---

(அ) காணிகள் வங்கி தொடர்பான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் E-Land Registry நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல், E-Slims நிகழச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல், காணிச் சுவீகரிப்பு பிரிவிற்காக தரவு முறைமையை நிர்மாணித்தல், E-LandHub இன் கீழ் நில அளவையாளர் திணைக்களத்தின், காணி உரிமையை நிர்ணயித்தல் திணைக்களத்தின் மற்றும் காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் கணனி முறைமையை மேம்படுத்துதல் மற்றும் அமுல்படுத்துதலை குறிக்கோளாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டின் போது 395,000,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாட்டில் 29 சதவீதம் அல்லது ரூபா 116,459,504 மாத்திரம் செலவு செய்யப்பட்டு ரூபா 278,540,496 நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(i) E-Land Registry நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 22 அலுவலகங்களில் உரிமைப் பத்திரங்களை மீளாய்வு செய்து கணனிமயப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 15 அலுவலகங்கள் மாத்திரம் பதிவேடுகளை கணனி மயப்படுத்தியிருந்தன. 2016 ஆம் ஆண்டின் போது செயற்திட்டங்களை அமுல்படுத்தக்கூடிய நிலையில் காணப்பட்ட 06 அலுவலகங்கள் இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை தரவுகளை கணனி மயப்படுத்தும் செயற்பாடு முறைப்படி இடம்பெற்றிருக்காமையின் காரணமாக அந்த 06 அலுவலகங்களிலும் மென்பொருட்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) காணிகளைச் சுவீகரித்தல் பிரிவிற்கான தரவு முறைமையை நிர்மாணித்தல் மற்றும் E-Land Hub இன் கீழ் காணி உரிமைகளை நிர்ணயித்தல் திணைக்களத்தின் ஒரு கணனி முறைமையை நிர்மாணிப்பதற்கான நிதிஏற்பாடும் மேற்கூறிய நிதிஏற்பாடுகள் உள்ளடக்கிருந்தும் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) காணிகள் பயன்பாட்டுக் கொள்கை மற்றும் திட்டமிடல் திணைக்களத்தில் ஒரு கணனி முறைமையை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் ரூபா 3 மில்லியன் பணம் செலவு செய்து ஒரு கணனி முறைமையை உருவாக்குதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

(ஆ) 1994 ஆம் ஆண்டிலிருந்து மூடப்பட்டிருந்து கந்தளாய் சீனித் தொழிற்சாலை 2015 ஆம் ஆண்டின் போது காணிகள் அமைச்சின் கீழ் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இத்தொழிற்சாலையை ஒரு முதலீட்டுக் கம்பனிக்கு ஒப்படைப்பதற்கான பங்குடமை உடன்படிக்கையானது 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதி கையெழுத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் தொழிற்சாலை வளவில் காணப்பட்ட ஏனைய ஆதனங்களையும் முதலீட்டுக் கம்பனியின் விருப்பின் பேரில் பயன்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததன் மூலம் ஆதனத்தை விற்பனை செய்வது தொடர்பாக சட்டமா அதிபரின் அபிப்பிராயம் கோரப்பட்டிருந்தது. அதற்கிணங்க பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி இரும்புகளையும் ஏனைய சொத்துக்களையும் விற்பனை செய்வதற்கு சட்டமா அதிபரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் உரிய முதலீட்டுக் கம்பனியால் பங்குதாரர் உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிடங்களும் இயந்திரங்களும் தமது கம்பனிக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக விற்பனை நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு அவசர இடைக்கால தடையினை சிங்கப்பூர் சர்வதேச தீர்த்து வைத்தல் நிலையத்தால் வழங்கப்பட்டுள்ளது என முதலீட்டாளரின் சட்ட ஆலோசகரினால் அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் விற்பனை செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க இத்தொழிற்சாலையை மீளமைத்தல் செயற்பாடும் குறிக்கோளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.2 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

### 2.2.1 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழங்கப்பட்ட நிதிஏற்பாடு சம்பந்தமாகத் தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைத் திட்டத்தில் கட்டிடங்களைப் புனரமைப்பதற்கு ரூபா 600,000 தொகையும் 02 உத்தியோகபூர்வ இல்லங்களை புனரமைப்பதற்காக ரூபா 350,000 தொகையும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இழப்பீட்டு மீளாய்வுச் சபைக்கு ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்துக் கொள்வது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.4.1 ஆம் வழிகாட்டிக்கு முரணாக கட்டிடங்களை வாடகைக்கு எடுத்துக் கொள்வதற்காக மூன்று தனிப்பட்டவர்களிடமிருந்து நேரடியாக விலைமனுக் கோரல் இடம்பெற்றிருந்தது.

(ii) பத்திரிகை அறிவித்தல்களின் மூலம் விலைகளைக் கோருதல் வேண்டுமென சிறிய பெறுகைச் சபை தீர்மானம் எடுத்திருந்தும் அத்தீர்மானத்தைக் கவனத்தில் கொள்ளாது நேரடியாக ஏனைய ஒரு வழங்குனரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 120,000 மாதாந்த வாடகையை அடிப்படையாகக் கொண்டு 02 ஆண்டுகள் காலத்திற்காக ஒரு குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட 35 பற்றாக்குறைகள் மற்றும் 44 மிகைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 757(2) இன்பிரகாரம் இனங்கண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சினால் ரூபா 11.40 மில்லியன் பெறுமதியான 02 மோட்டார் வாகனங்ககள் 09 ஆண்டுகள் காலமாகவும், ரூபா 48.55 மில்லியன் பெறுமதியான 07 மோட்டார் வாகனங்கள் 04 ஆண்டுகள் காலமாகவும் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்தது.

### (இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

ரூபா 5.00 மில்லியன் பெறுமதியான காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு மோட்டார் வாகனம் ஒரு ஆண்டு காலமாகவும் ரூபா 5.00 மில்லியன் பெறுமதியான நிலை அளவையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு மோட்டார் வாகனம் 04 ஆண்டுகள் காலமாகவும் முறையற்ற அங்கீகாரமின்றி அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு வந்தன.

## 2.4 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் ஏதாவது ஒரு சேவை அல்லது ஒரு வழங்கலுக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவின் அளவும் அதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பொறுப்புக்களும் நிதி ஆண்டிற்கான நிதிஏற்பாட்டை மிகைக்காதிருக்க வேண்டிய போதிலும் 10 செலவு விடயங்களுக்கான ரூபா 279,794 நிதிஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்களுக்காக கடப்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 2.5 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1950 இன் 09 ஆம் இலக்க காணிகளைச் சுவீகரித்தல் அதிகாரச்சட்டத்தின் 38(அ) உப கட்டளையின் கீழ் சுவீகரித்தல் சம்பந்தமாக விரைவாக இழப்பீட்டுப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அதற்கான வட்டியும் செலுத்த வேண்டியிருந்தது. இவ்வாறு 2017 ஆம் ஆண்டின் போது அமைச்சின் கூட்டுநிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா 1,993,565,640 இழப்பீட்டுப் பணமும் ரூபா 402,180,339 வட்டிப் பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது. வட்டிப் பணத்தைச் செலுத்துவதற்குரிய காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| சுவீகரிக்கப்பட்ட காலப்பகுதி | செலுத்திய இழப்பீட்டுப் பணம் | செலுத்திய வட்டி | சுவீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து இழப்பீடு செலுத்துவதற்கு எடுக்கப்பட்ட காலம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| 1976 - 1995 | 150,643,912 | 224,982,234 | 22 - 41 |
| 1996 - 2005 | 133,743,250 | 79,714,580 | 12 - 21 |
| 2006 - 2015 | 1,709,178,478 | 97,483,525 | 02 - 11 |
| | 1,993,565,640 | 402,180,339 | |

(ஆ) அவிசாவளை நீர் வழங்கல் முறைமையின் நீர்த் தேக்கத்தையும் நுழைவுப் பாதைகளையும் நிர்மாணிப்பதற்காக 02 ஏக்கர் 17.75 பேர்ச்சஸ்களை சுவீகரிப்பதற்காக 1950 இன் 9 ஆம் இலக்க காணிகளைச் சுவீகரித்தல் அதிகாரச் சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம் உப கட்டளைகள் 2004 சனவரி 09 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அதிகாரச் சட்டத்தின் 09 ஆம்பிரிவின் பிரகாரம் உரிமைப் பரிசோதனை மேற்கொண்டு உரிமையை உறுதிப்படுத்துவதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வலகந்துவத்த கடுபொல காணியிலிருந்து 2.33 ஹெக்டேயர்களை சுவீகரிப்பதற்காக காணிகளைச் சுவீகரித்தல் அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலானது 2006 ஏப்ரல் 18 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டிருந்தும் உரிய காணிக்கான உரிமையை உறுதிப்படுத்தும் பரிசோதனை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) காலி மாவட்டத்தின் கரன்தெனிய பிரதேச செயலகப் பிரிவில் கொஹிலவகுரவத்த காணியின் 190 ஏக்கர்கள் பாற்பண்ணை கிராம செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையால் சுவீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், உத்தேசிக்கப்பட்ட பால் கிராம செயற்திட்டத்திற்குரிய போதிய நிதிஏற்பாடு இல்லாததன் காரணமாக அக்காணி 2011 சனவரி 31 ஆந் திகதி விவசாயப் பண்ணையை நடாத்துவதற்காக இராணுவத்திற்கு ஒப்படைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2007 ஆம் ஆண்டிலிருந்து அக்காணி 03 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டது. அவ்வாறே 38(அ) உப கட்டளை பிரசுரிக்கப்பட்டு 10 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் உரிமைப் பரிசோதனையை நடாத்தி இழப்பீட்டுப் பணத்தைச் செலுத்துவதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிட்டம்புவ நகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக 38(அ) உப கட்டளையின் கீழ் 1996 திசெம்பர் 19 ஆந் திகதி சுவீகரிக்கப்பட்ட 4 ஏக்கர் 21.6 பேர்ச்சஸ்களைக் கொண்ட தம்பொக்க வயல் எனும் பெயருள்ள காணியில் 26 மற்றும் 27 ஆம் இலக்க காணித்துண்டுகள் 2016 ஆம் ஆண்டின் போது இழப்பீடாக ரூபா 4,764,000 தொகையும் வட்டியாக ரூபா 6,566,663 தொகையும் செலுத்தப்பட்டதனால் இழப்பீட்டுப் பணத்தை விட வட்டியை அதிகமாகச் செலுத்த வேண்டியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. காணிகளை சுவீகரித்தல் உத்தியோகத்தர்கள் மூலம் சுவீகரித்தல் செயற்பாடுகளுக்குரிய நடவடிக்கைகளைத் தாமதிக்காது நிறைவேற்றுவதற்கு உறுதியான நடைமுறை தயாரிக்காமை மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாமையின் காரணமாக இவ்வாறு வட்டிப் பணத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 2.6 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

---

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதிஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 152.43 | 151.78 | 0.65 | 0.43 |
| | மூலதனம் | 2,517.75 | 1,976.80 | 540.95 | 21.49 |
| | **மொத்தம்** | **2,670.18** | **2,128.58** | **541.60** | **20.28** |
| 2014 | மீண்டெழுபவை | 236.65 | 233.56 | 3.09 | 1.30 |
| | மூலதனம் | 2,443.50 | 2,374.84 | 68.66 | 2.81 |
| | **மொத்தம்** | **2,680.15** | **2,608.40** | **71.75** | **2.78** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2015 | மீண்டெழுபவை | 282.52 | 270.31 | 12.21 | 4.32 |
| | மூலதனம் | 3,109.27 | 2,619.95 | 489.32 | 15.74 |
| | **மொத்தம்** | **3,391.79** | **2,890.26** | **501.53** | **14.79** |
| 2016 | மீண்டெழுபவை | 307.11 | 290.85 | 16.26 | 5.29 |
| | மூலதனம் | 3,175.32 | 2,001.87 | 1,173.45 | 36.96 |
| | **மொத்தம்** | **3,482.43** | **2,292.72** | **1,189.71** | **34.16** |
| 2017 | மீண்டெழுபவை | 308.97 | 304.96 | 4.01 | 1.30 |
| | மூலதனம் | 3,161.05 | 1,768.46 | 1,392.59 | 44.05 |
| | **மொத்தம்** | **3,470.02** | **2,073.42** | **1,396.60** | **40.25** |

**வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தாமை**

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு கிரய அலகிற்குரிய செயற்பாடுகளை தயாரிக்கும் போது ஒவ்வொரு கிரய அலகிற்குரிய செயற்பாடுகளை உறுதியாக இனங்காணுதல், வளங்களின் தேவைப்பாடு, வளக் கிரய பகுப்பாய்வு, உள்ளீடுகள் மற்றும் பெறுபேறுகளை இனங்காண்தல், மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் சிறப்பு என்பது தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்ளல் ஆகிய நடைமுறைகள் பின்பற்றப்படாமையின் காரணமாக பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கான ரூபா 400,000,000 நிதிஏற்பாட்டில் ரூபா 256,664,753 செலவு அதாவது 64 சதவீதம் மாத்திரம் செலவு செய்து ரூா 143,335,248 பணம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 500,000 தேறிய நிதிஏற்பாடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 09 செலவு விடயங்களுக்காக ரூபா 1,319.8 மில்லியன் கூட்டுப் மொத்தமான நிதிஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அச்செலவு விடயங்களுக்குரிய நிதிஏற்பாட்டில் ரூபா 1,750.6 மிவ்வியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டதனால் சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 17 சதவீதத்திலிருந்து 71 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

**2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

-----------------------------------------------------------------------------------------------------

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

-----------------------------------------------------------------------------------

திணைக்களத்திற்குரிய 15301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழேதரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 17.00 | 14.97 | 7.50 | 9.11 | 43.22 | 43.21 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்த தொகையானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து ரூபா 98,728 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 02 ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாகக் காணப்பட்டிருந்தும் அக்கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது.

## 2.8 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

அமைச்சினால் பொறுப்புக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | நிதிப்பிரமாணம் |
|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

## 2.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 104(4) | 11 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை 2018 மார்ச் 31 ஆந் திகதிவரை சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) ஏனைய சுற்றறிக்கைகள் | |
| 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதியின் சுற்றறிக்கை | அமைச்சின் உத்தியோகத்தர்களால் அங்கீகரிக்கப்பட்ட அளவினை விட மிகையாக 02 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. |

## 2.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

அமைச்சின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 251.65 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க தனிநபருக்கான செலவு ரூபா 526,462 ஆகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- | --- |
| (i) | சிரேஷ்ட மட்டம் | 25 | 22 | 03 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 447 | 408 | 39 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 52 | 45 | 07 |
| | **மொத்தம்** | **528** | **478** | **50** |